**සබරගමුව පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව**
**சபரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களம்**
Sabaragamuwa Provincial Department of Education

wjidk වාර්ෂික පරීක්ෂණය - 2015
இறுதியாண்டுப் பரீட்சை 2015
Year End Term Test 2015

08 ශ්‍රේණිය
தரம் 08
Grade 06

භූගෝල විද්‍යාව I, II
புவியியல் I, II
Geography I, II

meh folhs
இரண்டு மணித்தியாலம்
Two Hours

மாணவர் பெயர்:…………………………………………… சுட்டெண்

**பகுதி 01**

- **சகல வினாக்களுக்கும் விடையளிக்க**
- **வினா இலக்கம் 1-5 வரையுள்ள வினாக்களுக்கு உரிய விடையைத் தெரிவுசெய்து அதன் கீழ் கோடிடுக.**

1) ஞாயிற்றுத் தொகுதியில் உள்ள கோள்களுள் சிவப்பு நிறக் கோள் எனக் குறிப்பிடப்படும் கோள்.

(i) புதன் (ii) செவ்வாய் (iii) வெள்ளி (iv) சனி

2) உப கோள்கள் அற்ற கோள்கள் இரண்டும் எவை?
   (i) வெள்ளி, புவி
   (ii) செவ்வாய், வியாழன்
   (iii) புதன், வெள்ளி
   (iv) செவ்வாய், வியாழன்

3) அந்தீஸ் மலைத்தொடர் அமைந்திருப்பது,
   (i) தென் ஆபிரிக்கக் கண்டத்தில்
   (ii) ஆபிரிக்கக் கண்டத்தில்
   (iii) வடஅமெரிக்கக் கண்டத்தில்
   (iv) ஐரோப்பாக் கண்டத்தில்

4) உயிர்க்கோளத்திற்குரிய உயிர்க் காரணிகளைக் காட்டும் சரியான விடை
   (i) தாவரங்கள், விலங்குகள், மண்
   (ii) ஞாயிற்றுத் தொகுதி, சூரிய ஒளி, விலங்குகள்
   (iii) தாவரங்கள், நுண்ணுயிரிகள், நீர்
   (iv) தாவரங்கள், விலங்குகள், நுண்ணுயிர்கள்

5) இந்தியாவின் தலைநகரமாவது,
(i) புதுடில்லி (ii) கல்கத்தா (iii) மும்பாய் (iv) சென்னை


- **வினா இலக்கம் 6 – 10 வரையான வினாக்களுக்கு மிகவும் பொருத்தமான விடையைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக.**

6) சூரியனின் மேற்பரப்பு வெப்பநிலை சராசரியாக ............................. ஆகும்.
7) புவிச் சுழற்சியின்போது $20^{o}$ நெட்டாங்கைக் கடப்பதற்கு எடுக்கும் நேரம் ........... நிமிடங்கள் ஆகும்.
8) ................................... புவியினுடைய வளிமண்டலத்தில் அதிகளவு வாயுவாகும்.
9) கலாஸ் எனும் ஆதிவாசிகள் வாழும் நாடு ............................. ஆகும்.
10) கலாசார பாரம்பரியங்கள் தொட்டுணரக் கூடியவை, ................................ என இரு வகைப்படும்.

- **இலக்கம் 11 – 15 வரையான வினாக்களின் கூற்றுக்கள் சரியாயின் ✓ எனவும் பிழையாயின் × எனவும் அடைப்புக்குள் அடையாளமிடுக.**

11) நெல், சோளம், காய்கறி என்பன நுகர்வு விவசாயப் பயிர்களுள் அடங்கும். (   )
12) இமயமலைப் பகுதியில் வாழும் பழங்குடியினர் காசா இனத்தினர் என அழைக்கப்படுகின்றனர். (   )
13) சுகாதாரம், போக்குவரத்து, தொடாபாடல் என்பன சேவைகளுள் அடங்கும். (   )
14) 1:50000 அளவுத்திட்டத்தையுடைய தேசப்படங்களில் தேயிலை, இறப்பர், தென்னை போன்ற பயிர்கள் பௌதிக அம்சங்களுள் அடங்குகின்றன. (   )
15) தெற்காசிய நாடுகளின் காடுகளின் பரம்பல் அதிகமாகக் காணப்படுவது நேபாளத்தில் ஆகும். (   )

- **வினா இலக்கம் 16 – 20 வரையான வினாக்களுக்கு விடையளிப்பதற்கு தரப்பட்ட உலகப்படத்தைப் பயன்படுத்துக.**



16) A எழுத்தினால் காட்டப்படும் மலைத்தொடரினைப் பெயரிடுக.

17) ஏடன் குடா எவ்வெழுத்தினால் காட்டப்பட்டுள்ளது?

18) C எழுத்தினால் காட்டப்படும் ஆறு எது?

19) D எழுத்தினால் காட்டப்பட்டுள்ள கடல் எது?

20) B எழுத்தினால் காட்டப்படும் ஏரி எது?

## பகுதி - II

- **முதலாம் வினா உட்பட எல்லாமாக 5 வினாக்களுக்கு விடை தருக.**

1) முறையான தேசப்பட நுட்பங்களைக் கொண்டு வழஙகப்பட்டுள்ள உலகப் புறவுருவப்படத்தில் பின்வரும் இடங்களைக் குறித்துப் பெயரிடுக.
   (i) மத்தியதரைக்கடல்
   (ii) கினிவளைகுடா
   (iii) டிரகன்ஸ்பேக் மலை
   (iv) திபெத் மேட்டுநிலம்
   (v) நைல் நதி
   (vi) பங்களாதேஸ் ( 12 புள்ளிகள்)

2) புவிச் சுழற்சிக்கு ஏற்ப $360^{O}$ நெட்டாங்குகளை கடக்க 24 மணித்தியாலங்கள் எடுக்கின்றன. அதன்படி,
   (i) 3 மணித்தியாலங்களில் கடக்கும் நெட்டாங்குகளின் எண்ணிக்கையினைக் குறிப்பிடுக. ( 3 புள்ளிகள்)
   (ii) பிரதானமான நான்கு பருவகாலங்களையும் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)
   (iii) வளிமண்டலத்தின் படையமைப்பினைக் காட்டும் படத்தினை வரைந்து பெயரிடுக. (5 புள்ளிகள்)

3)
   (i) பின்வரும் நாடுகளின் தலைநகரங்களைக் குறிப்பிடுக.
   a – பூட்டான், b-நேபாளம் , c-மாலைதீவு ( 3 புள்ளிகள்)

   (ii) கீழ்வரும் பகுதி ‘அ’ விற்கு பொருத்தமானதை பகுதி ‘ஆ’ வில் இருந்து தெரிவு செய்து எழுதுக.

| பகுதி – அ | பகுதி – ஆ |
|---|---|
| A. இந்தியா ……………………… | சிந்துநதி |
| B. பாகிஸ்தான் …………………… | எவரெஸ்ட் |
| C. நேபாளம் ……………………… | சுந்தர்பாண்ஸ் சமவெளி |
| D. பங்களாதேஸ் ………………… | தக்கன பீடபூமி (4 புள்ளிகள்) |

(iii) கீழே காணப்படுவது தென்னாசியாவில் காணப்படும் கலாசார பெறுமானஙகள் மிக்க இடங்களின் படங்களாகும் அவற்றை முறையே பெயரிடுக.

A



B



C



D



E



(5புள்ளிகள்)

4)

(i) இந்திய கிராமியப் பகுதிகளில் சக்தி வளங்களை பெற்றுக்கொள்ளும் மூலங்களைக் குறிப்பிடுக. ( 3 புள்ளிகள்)

(ii) இந்திய கிராமியப் பகுதிகளில் மக்கள் சக்தி வளத்தை உற்பத்தி செய்து கொள்வதற்காக பயன்படுத்தும் பொருட்கள் 4 குறிப்பிடுக. ( 4 புள்ளிகள்)

(iii) இந்தியாவின் கிராமப்புற மக்கள்,

(a) சக்தி வளத்தை பெற்றுக்கொள்வதில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் 2 தருக.

(b) சக்திவளத்தை பயன்படுத்தும் 3 சந்தர்ப்பங்களை குறிப்பிடுக. ( 5 புள்ளிகள்)

5)

(i) பாகிஸ்தானில் அதிகளவில் கிராமியக் கைத்தொழில் பரவியுள்ள பிரதேசங்கள் 3 பெயரிடுக. ( 3 புள்ளிகள்)

(ii) பாகிஸ்தானின் கிராமியக் கைத்தொழில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் 4 பெயரிடுக. ( 4 புள்ளிகள்)

(iii) பாகிஸ்தானின் கிராமியக் கைத்தொழில்,

a) அந்நாட்டு மக்களின் வாழ்க்கையில் ஏற்படுத்தும் சாதகமான விளைவுகள் 2 தருக.

b) அக் கைத்தொழிலின் புதிய போக்குகள் 2 தருக. ( 5 புள்ளிகள்).

6)

(i) கல்வி அபிவிருத்தி தொடர்பில் இலங்கை அரசு உமக்கு வழங்கியுள்ள வசதிகள் 3 தருக. ( 3 புள்ளிகள்)

(ii) தென்னாசிய வலய நாடொன்றில் பிரதேச மற்றும் மாவட்ட அடிப்படையில் எழுத்தறிவு வீதம் பல்வகைப்பட்டதாகக் காணப்படுவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் 2 குறிப்பிடுக. ( 4 புள்ளிகள்)

(iii) நாட்டில் உள்ள மக்களின் எழுத்தறிவு உயர் மட்டத்தில் நிலவும் போது ஏற்படும் சாதக விளைவுகள் 05 தருக. ( 5 புள்ளிகள்)

7)

(i) விவசாயப் பயிர்களை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்கள் 3 பெயரிடுக. ( 3 புள்ளிகள்)

(ii) தென்னாசிய வலய நாடுகளில் விவசாயப் பொருளாதாரம் சார்ந்த பிரச்சினைகள் 2 எழுதிக் காட்டுக. ( 4 புள்ளிகள்)


(iii) a) வேலைவாய்ப்பின்மை என்பதன் மூலம் விளங்கிக் கொள்வது யாது? ( 5 புள்ளிகள்)

b) வேலைவாய்ப்பின்மை ஒரு நாட்டின் அபிவிருத்தியில் ஏற்படுத்தும் தாக்கங்கள் 3 தருக.


8)

(i) 1:50 000 மெற்றிக் தேசப்படங்களில் காணப்படும் கலாசார அம்சங்கள் மூன்றினை வரைந்து காட்டுக. ( 3 புள்ளிகள்)


(ii) 1:50000 மேற்றிக் தேசப்படங்களில் காணப்படும் கீழ்வரும் குறியீடுகளை அறிந்து பெயரிடுக.




A



B



C



D

(iii) 1: 50000 மெற்றிக் தேசப்படத்திற்கு ஏற்ப கீழ்வரும் தரைத்தோற்ற இயல்புகளை வரைந்து காட்டுக.

a) மென்சாய்வு

b) குத்துச்சாய்வு